திருவள்ளுவர் ஆண்டு 2036

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 1 சனவரி 2005

ரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை	செயலாளர்
திரு. மா. சங்கர பாண்டியன்	உறுப்பினர்
திரு. டாக்டர். ந. சேதுராமன்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக்	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. வே. திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி	

கல்லூரிக்குழு

டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS.,	தலைவர்
திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல்	செயலாளர்
திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்.,	உறுப்பினர்
திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்.,	உறுப்பினர்
திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ.	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்.,	உறுப்பினர்
டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர்	உறுப்பினர்

செந்தமிழ்

தொகுதி : 99
பகுதி : 1
சனவரி 2005

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2036

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

இதழ் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்., செயலர்

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

பொருளடக்கம்

இதழ்மணம்		05
நூல்மதிப்புரை		06
சங்கஇலக்கியங்களின் வழி மதிப்புக்கல்வி	பேராசிரியர் தமிழண்ணல்	08
திராவிட மொழியியல் அறிமுகம்	கி.அரங்கன், தஞ்சாவூர்	14
பெரியபுராணக் காப்பிய ஒருமை	பேராசிரியர்.அண்ணாமலை	30
இலக்கணத்தின் தேவை	தமிழாகரர் தெ.முருகசாமி	39

இதழ் மணம்

இந்த இதழில் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் சங்க இலக்கியங்களின் வழி மதிப்புக் கல்வி என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுகிறார்கள் கல்வி நிறுவனங்களில் தமிழ்ப்பாடம் இடம் பெற ஒரு நூற்றாண்டுகளுக்கு முன்பு அறிஞர்கள் முயன்று தமிழ்ப்பகுதி ஒன்று கல்லூரிகளில் பயிற்று விக்கப்படுதல் வேண்டும் என்னும் வகையில் உறுதி செய்யப்பட்டு வழக்கில் இருந்து வருகிறது.

இக்காலத்தில் உலக மயமாதல் என்னும் மாயையில் தமிழ்க் கல்வி புறக்கணிக்கப்பட்டு வருவதைப் பேராசிரியர் எடுத்துரைப்பது அறிவு உலகத்தின் சிந்தனைக் குரியதாகும் கல்வியாளர்கள் தக்க இடத்தில் தக்க வண்ணம் வலியுறுத்தாவிட்டால் இளைய தலைமுறை உயர் தனி விழுமியங்கள் பலவற்றை இழப்பதோடு அன்றாட வாழ்க்கையின் இனிமையைக் கூட இழக்க நேரிடும் என்பதைப் பேராசிரியர் அறிவு நிலையில் நின்று எடுத்துரைத்துள்ளார்கள் கல்வியாளர்கள் கட்டுரைப் பொருளை எழுத்தெண்ணிச் சிந்திக்கக் வேண்டும்

தஞ்சையிலிருந்து பேராசிரியர் கி.அரங்கன் அவர்களின் திராவிட மொழியியல் அறிமுகம் என்னும் கட்டுரை வெளிவருகிறது திராவிட மொழிக் குடும்ப அமைப்பையும் பிரிவுகளையும் புவியியல் பகுப்பு முறை திணைபால் வேறுபாடுகளையும் கட்டுரையில் ஆசிரியர் சிந்தித்துள்ளார் மொழியியல் மொழி வரலாற்று மாணவர்கள் ஆய்வாளர்கள் ஆசிரியர்களின் ஆய்வு களங்களைக் கட்டுரை ஆசிரியர் சுட்டியிருப்பது ஆய்வு நெறியாளர்களும் நிறுவனங்களும் கருத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும்

பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்களின் பெரிய புராணக் காப்பிய ஒருமை என்னும் தலைப்பில் வேடமே மெய்ப் பொருள் என்னும் நான்காம் பகுதி வெளிவருகிறது வேடமே மெய்ப் பொருள் எனக் கொண்ட நாயன்மார்களின் வாழ்வு நெறியைத் நுண்ணிதின் ஆராய்ந்துள்ளார்கள் மெய்ப் பொருளை நினைவிற் கொள்ள மெய்ப் பொருள் வேடம் வேண்டும் அவ்வேடத்தை அடியார்கள் போற்றி வளர்த்த பாங்கினைக் கட்டுரையில் கற்று இன்புறலாம்

சிலப்பதிகாரச் சுவையைப் பேராசிரியர் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள் இலக்கணத்தின் தேவை என்னும் தலைப்பில் தருகிறார்கள்

மதுரை புலவர் பழனியம்மாள் 18.1.05ல் மதுரையில்

இயற்கை எய்தினார். அவர் தம் வாழ் நாள் முழுவதும் தமிழ்த் தெய்வத்தை வழிபட்டு வந்தார்கள் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்க நூல் நிலையத்தை நன்கு பயன் படுத்தி வாழ்ந்ததோடு தமிழ்ச் சங்கம் இறுதிக் காலத்திலும் அவர் நெஞ்சில் நிறைந்து இருந்தது என்பது குறிப்பிட த்தக்கது. அவர்கள் மருத்துவ மனையில் இருக்கும் போது தன் வாழ்நாளில் சேர்த்து வைத்திருந்த நூல்களையும் புத்தகப் பேழையையும் தமிழ்ச் சங்கத்திற்கு அளிக்க வேண்டும் என எழுதாக் கிளவியாக கிளர்த்தியுள்ளார்கள் அன்னாரது நல்லுயிர் தமிழ்த் தெய்வத்தின் திருவடியில் என்றும் இன்புறுவதாக.

நூல் மதிப்புரை

நூல்; "திருக்குறளில் மரபும் திறனும்"
ஆசிரியர்; பேராசிரியர் கரு.வை.பழனிசாமி.
பதிப்பகம்; திருமொழிப்பதிப்பகம்
42,பாரதீசுவரர் குடியிருப்பு
சூளமேடு, சென்னை - 94

பேராசிரியர் கருவை பழனிசாமி அவர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத்திருக்குறளில் ஆழங்கால்பட்டு அதன் சுவை உணர்ந்து மாணவர்களுக்குத் தமிழ்ச் சுவை நுகரும் வண்ணம் தமிழறிவுறுத்தி வந்தவர். அவர்கள் திருக்குறளில் மரபும் திறனும் என்னும் இந்நூலில் இலக்கணக் கருவி கொண்டு திருக்குறள் சுவையை வெளிக்கொணரும் உத்தியைக் கையாண்டுள்ளார்கள். இலக்கியச்சுவைஞர்களே நூலின் திறனையும் மரபுவழியாக அது உணர்த்தும் நுண்மையையும் கற்பவராவர். உணர்ந்து அனுபவிக்ககூடிய எளிய இனிய ஆற்றொழுக்கான தமிழ் நடை அவருக்குக் கை வந்தகலையாக உள்ளது. ஊழ், முயற்சி போன்ற மாறுபாடுகளை திருவள்ளுவர் வழிநின்று ஆசிரியர் கற்போர் மனம் கொள்ளத்தக்க வகையில் எடுத்து உரைக்கும் சிறப்பு இன்புறத்தக்கது. ஆசிரியரின் உணர்ச்சி மிக்க நடைநூல்

முழுவதையும் ஒரே மூச்சில் படித்து முடிக்கத்தூண்டுகிறது. புல்லறிவாண்மை குறித்து ஆசிரியர் கருவை பழனிசாமி நடைநயம் இன்புறத்தக்கது.

பொருட்பாலில் புல்லறிவாண்மை என்ற அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் குறளில் நோய் என்பதன் பொருண்மை முற்றிலும் வேறுபட்டுள்ளதை உணர முடிகிறது.

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய் (848)

உயிரின் உயிரான இயல்பு கற்றல், அதனை உணர்தல் தன்மைத்து என்பார் பரிமேலழகர். உடல் வசப்பட்ட உயிர் மருடல் தன்மைத்தாய் வேறுபட்டபோது தானாகவும் செய்யத்தக்கதைச் (கற்றல்) செய்வதில்லை அறிவுடையார் கற்பித்தாலும் செய்வதில்லை இத்தகைய உயிரைத் தாங்கும் உடலை அய்யன் திருவள்ளுவர் பழிக்க விரும்பினார். கல், முள், கடல், மலை, முதலியவற்றைப் பொறுக்கின்ற நிலத்திற்கு அப்பாவயாக்கை பெரும் சுமையாகத் துன்பம் தருதலால் அதனை ஒரு நோய் என்று வகைச்சொல் மூலம் பழித்துரைத்தார் தனக்கும் பயன்படாமல் ஊர் உலகிற்கும் பயன்படாத புல்லறிவாளன் சமூகத் தீமையாவது பற்றி நிலச்சுமை என்பதைக் குறிப்பாக உணர்த்த அவ்வுயிர் போஒம் அளவும் ஒரு நோய் என்று சுட்டுகிறார் உடல் நோய் வேறு உயிர் நோய் வேறு மனநோய் வேறு; புல்லறிவாண்மையை நிலத்திற்கு கேடு தரும் சமூக நோய் என்பது முற்றும் வேறுபட்ட தொரு பொருண்மையாகும்.

நூலாசிரியர் நூல் முழுவதும் இலக்கண இலக்கியச் சிந்தனையோடு சமூகப்பார்வையை நூலின் மையமாக வைத்திருப்பது நூலுக்குப் பெருமை சேர்ப்பதோடு தனித்தன்மை உடையதாக நூலுக்கு அணிசெய்கிறது.

சங்க இலக்கியங்களின் வழி மதிப்புக்கல்வி

பேராசிரியர் தமிழண்ணல்

'மதிப்புக் கல்வி' என்பது மானுட விழுமியங்களைப் பற்றியது. மனிதனும் பேசத் தெரிந்த ஆறறிவுடைய விலங்கினமே. அவனை விலங்கு நிலைக்குக் கீழிறங்கவும் மக்களினமாகவே நிலைபெறச் செய்யவும் கூடியன, அவன் பண்பு நலன்களே. அவனை மனித நிலையினின்றும் மேம்படச் செய்தலும் கூடும். அதைத் 'தெய்வநிலை' என்பர்.

அன்பும் பண்பும் கூடிய அறிவை 'நல்லறிவு' 'பேரறிவு' என்றும் பண்புடன் சேராத அறிவைக் 'காரறிவு' என்றும் இருவகைப் படுத்துவார் திருவள்ளுவர்.

எனவே அறிவைத் தரும் கல்வி, பண்புடையதாக இருக்கவேண்டும். பண்பு சாராத அறிவும், அறிவியலும் உலகை அழிப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். பண்பை அறிவியல் தராது; ஆனால் அது வாழ்விக்க வல்லது. அறிவு மட்டுமே எனில் அது நல்லதற்கும் பயன்படும்; அல்லதற்கும் பயன்படும். அறிவியல் வேலை வாய்ப்புத் தரும்; பண்பு மனிதனை மனிதனாக்காவிட்டால், காரறிவும் அழிவுதரும் அறிவுமே மேலோங்கும். இப்பண்பட்ட அறிவை நல்குவன மொழியறிவும் நல்லிலக்கியங்களுமேயாம்.

இதை யுணர்ந்த நம் முன்னோர், கல்வி சார்ந்த பாடத்திட்டத்தில், மொழிப் படிப்பை முதற்பிரிவில் சேர்த்து (I [part) அதற்குச் சிறப்பிடமும் நல்கினர். இன்று பண்பு சோறுபோடுமா, பணம் தருமா, வருமானமுண்டா, வாழ்வுக்குரிய வசதிகள் தருமா என எண்ணி, மொழிப் பாடம் படிப்படியே குறைக்கப்பட்டு, அறவே நீக்கவும் படுகின்றன.

தன்னாட்சி வந்ததும், 'வேலை வாய்ப்புக் கல்வி தருகிறோம்; அறிவியல் மட்டுமே கற்றுத் தருகிறோம்' என முழங்கி, விளம்பரப்படுத்துகின்றனர். மக்களும் இன்றைய வாழ்க்கைப் போட்டியில் அதனால் பெரிதும் ஈர்க்கப்படுகின்றனர்.

பண்பைத் தரும் இலக்கியக் கல்வியை மறுப்பது, மனிதகுல

நாசத்திற்கே பயன்படும். மனத்தைப் பண்படுத்தாத அறிவியல், நாசந்தரும் குண்டுகளையே உருவாக்க முந்தும். கண்டவர்மீது வீசச் சொல்லும், இன்றைய திரைப்படங்களிற் போல, மனித இனம் 'விலங்கினப் புணர்ச்சி நிலைகளையே' பார்த்துக் கெடுகிறது.

காதலை 'அகமெ'ன்ற தமிழ்ப் பண்பாடு, மேலை நாட்டவரைப் பார்த்து இங்கும் சீரழிந்து போனது.

சுற்றுச் சூழல் மாசுத் தடுப்பு

இன்று உலகெங்கும் நீராலும் காற்றாலும் ஒலியாலும் தூய்மையற்ற பழக்கங்களாலும் சுற்றுச்சூழல் மாசுபடுவதால் மனிதன் நோய்வாய்ப்பட்டு அழிவதைப் பற்றி ஆயிரம் பேசுகின்றனர்.

திரைப்படம், நாடகம் போலும் கலைகள் பலவும் பிற இதழ்களனைய ஊடகங்கள் அனைத்தும் வளரும் இளையோரின் மனத்தில் 'மாசு' பரப்புவதையும் அதனால் உலக இனமே 'தீவிர வாதம்' 'மதவெறி', 'இனவெறி'களால் அழிவதையும் பற்றிப் பெரிய அறிஞர்கள் பேசுவதில்லை. பிற மாசுத் தடுப்பு வாரியங்களைவிட, 'மன மாசுத் தடுப்பு' வாரியங்களே இன்று முதன்மையிடம் பெறவேண்டும். அதற்குக் கலைகளைப் பயன்படுத்தலாம்; அதிலும் நீதி, அறம், பண்பு, அன்பு பற்றியனவும் தன்னல மறுப்பு, தன்னீகம், தன்னார்வம் போல்வன பற்றியனவுமான மானுட மதிப்புகளின் அடிப்படைச் சிந்தனைகளைத் தருவன இலக்கியக் கலையே. அவற்றைக் கண்டறிதல், கற்றல், கற்பித்தல், பரப்புதல் வேண்டும்.

மானிட மதிப்புகள் பற்றிய சிந்தனை ஏன்?

நிலைபேறான மதிப்புகள் அறம் பொருள் இன்பம் என்றும், அவற்றைக் கற்பிப்பதே இலக்கிய நோக்கம் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். (1363) இவை (Eternal Values) தவிர, மானுட மதிப்புகள் (Human Values) என்பன பல இதன் உட்கூறுகளாக வரும்.

திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்தை எடுத்துக்கொள்ளுங்கள் பண்புகளையுடைய பண்பியாம் 'இறைமை' என்பது அதன் சாரம்.

பண்புகளை வளர்த்துக்கொள்வது, மேம்படுத்துவது என்பனவே வழிபாடு, வழிபாடு - வழிபடுதல் - நல்வழிபடுதல் என்பனவே உண்மையான வழிபாடு.

இன்றைய வழிபாட்டுச் சடங்கு முறைகள், வழிபாடுகளே அல்ல; இவை புண்ணிய வியாபாரம்; பக்தி வாணிகம். இன்றையப் பக்தி முறைகளும் ஆன்மிகம் என்பதும் மனிதனைத் தீயன செய்யத் தூண்டுவனவும் துணைநிற்பனவுமாகிவிட்டன. அங்குள்ள சுற்றுச்சூழலும் மனமாசு பரப்பும் நிலையங்களாகி விட்டன.

முன்னேற்றத்தை நோக்கி சிறப்பை நோக்கி, உன்னதத்தை நோக்கி மனிதமனம் பண்படுத்தப்படவேண்டும். தீமைகளை அறவே ஒழிக்கவேண்டும். 'அது களை கட்டதனோடு நேர்' என்பது வள்ளுவம் (550)

மதிப்புக் கல்வி தரும் இலக்கியங்கள்

1. தன் முன்னேற்றம், தன்னம்பிக்கை, தன் முயற்சி பற்றிய இலக்கியம், பாடல்கள், பாடற்பகுதிகள், கதைகள் எனத் தேர்வு செய்ய வேண்டும். 2. மனித நேயம், உயிரிரக்கம், சமயப்பொறை பற்றியவை இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத் தேவை. 3. தன்னீகமாம் தியாகம், நிலையாமையுணர்ந்து நிலைத்தன செய்தல், தன்னல மறுப்பு, எதிலும் 'வேண்டாமை என்னும் விழுச்செல்வ' மனப்பான்மை கற்கப்படவும், கற்பிக்கப்படவும் வேண்டும். 4. தூய மலரினும் மெல்லிய காதலுணர்வுகள், பாலுணர்வுகள், குடும்ப உணர்வுகள், குடிமைப் பயிற்சிகள் வேண்டும். 5. மனிதனை நோக்கிய இலக்கியமே நமக்குத் தேவை. 6. தடை கடத்தல், துன்பத்தை வெல்லுதல், உச்சத்தைத் தொடுதல் போல்பவை மிகச் சிறந்தவை. 7. நயத்தக்க நாகரீகம், பகையுள்ளும் பண்பாடு, படிநிலை அறம் - அதாவது கீழே உள்ளவர், பொறிக் குறையுடையவர், துணையற்றவர் உயர வழிகாட்டும் இலக்கியப் பகுதிகள். 8. நன்மை, தீமை என 'இருமை' வகைதெரிய வழிகாட்டுபவை 9. புறச்சடங்குகளில் மூட நம்பிக்கைகளை இனங்காட்டி ஒழித்தல் - பரிகாரம் செய்தால் பாவம் போகுமென்ற மனப்பான்மைகளை முற்றிலுமாக ஒழித்தல், பிராயச்சித்தம் என்பது செய்த தீமைகளினின்றும்

விடுபடுதல், அழுதல், வருந்துதல், திருந்துதலே என்றும் கடவுளுக்கும் 'கையூட்டுக் கொடுக்கும்' - இந்திய மனப்பான்மைகளைக் களைதல் 10. மனிதனை இருளைவிட்டு ஒளியை நோக்கி அழைத்துப் போதல்.

இத்தகைய இலக்கியப் பகுதிகள் ஓரடிப்பாடல் முதல் ஓராயிரம் கதைகள் வரை ஆயிரம் ஆயிரம் உள. அவற்றைத் தேர்ந்தெடுத்துப் பாடத்திட்டம் சமைத்தல், நல்லாசிரியர் கடமை. இதனைப் பேருழைப்பும் பெருமுயற்சியும் தரும் பணி எனலாம்.

இன்று நாம் பாடத்திட்டம் வகுக்கும் முறை உலகறிந்ததே.

மதிப்புக் கல்வி -

பயிற்றும் முறைகளும் கற்கும் நெறிகளும்

இத்தகைய இலக்கியங்களை இலக்கிய நயங்காணவே பயன்படுத்துகிறோம்; உரை விளக்கம் சொல்லவே முந்துகிறோம்; அதிலும் கருத்து வேறுபடுகிறோம்; மனத்தளவில் நயங்களில் ஊறி இன்புறுகிறோம். அதனால் கற்பிக்கும்போது சொல்லிச் சொல்லி இன்புறுத்துபவரே பெரிய பேராசிரியர் என மதிப்பிடப் படுகிறார்.

சிலர் இதைப் பொழுதுபோக்குக் கல்வி ஆக்குவர்; நகைச்சுவைக்கு மட்டுமே பயன்படுத்துவர். அதுவும் தேவைதான் ஆனால் 'உப்பு அமைந்தற்றால் புலவி' என்பது போன்றது அது. மிகுந்தால் நோக்கமே பறிபோய்விடும்.

மானிட மதிப்புறு இலக்கியங்களை, வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் கற்பிக்க வேண்டும். மேலைநாட்டார் நீண்ட காலம் 'கலை கலைக்காகவே' என வாதிட்டு, இன்று அறவே அதைக் கைவிட்டனர். நாமும் அவர்கள் 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாகவே' இருந்துபோனோம். இன்றளவும் நாம் நம் கலைப் பெருமையை, இலக்கியச் செழுமையை, மானிட மதிப்புக்குரிய நம் இலக்கியங்களை மேலை நாட்டார்க்குக் கொண்டு கொடுத்தோமில்லை; அவர்கள் விளங்கிக் கொள்ளுமளவு அறிவுறுத்தினோமில்லை.

நாமே அல்லவா நம் இலக்கியங்களை வாழ்க்கை நடைமுறையில் பின்பற்றாமல், மேடைப்பேச்சுக்கும்

விளக்கவுரைகளை மாறிமாறி பார்த்துப்பார்த்து எழுதவுமே பயன்படுத்திவருகிறோம்.

திருக்குறள் வழி வாழ்பவர் என ஒருவர் இருவரைக் காட்டமுடியுமா? ஆனால் உரை எழுதுபவர், ஆய்வு செய்பவர், உரையாற்றுபவர் பல ஆயிரவர் உளர். திருக்குறளைப் பின்பற்றினால் வேள்வி, ஹோமம் என்று மக்களுக்குப் பயன்படும் பொருள்களைத் தீயில்போட்டு 'எரியோம்புதல்' இயலாததே? கூடாதே? பிறப்பினால் உயர்வுதாழ்வு பேசவும் கூடாதே? தீண்டத் தகாதவர் காலைத்தொட்டு வணங்க விழும்போது, பாதங்களில் துணியைப் போட்டு மறைத்துக் கொள்ளும் தீண்டாமையும் தவறாகுமே? அரசியல் தலைவர்களுக்குக் 'கறைபடியாத' ஊழலற்ற - நற்பண்பே முக்கியம் எனும் 'வினைத்தூய்மை' அதிகாரம் இன்று இந்திய நாட்டில் எந்த மூலையிலும் பயன்படவில்லையே? காடுபோவது, கமண்டலம் ஏந்துவதன்று துறவு; இல்லறத்தானே உண்மைத்துறவி, நல்லதவத்தவன், விருந்தோம்பலே வேள்வி என வாழ்வோமே?

காவி உடுத்தவன் கயவனேயாயினும் காலில் விழுகிறோமே? 'வாழ்வாங்கு வாழும் இல்லறத்தானே, தெய்வம்;' சன்னியாசிகள் - அதிலும் 'வசூல்செய்து வளம் பெருக்கி இன்ப வாழ்வு தேடும்' துறவிகள், துறவிகளே அல்லர் எனச் சொல்ல நேருமே? குறள் கூறும் துறவு 'உடம்பும் மிகை' என்கிறதே?

உலகிலேயே - ஏன் - இந்திய நூல்களிலேயே பாவங்களுக்கும் கிரக தோசங்களுக்கும் எனப் 'பரிகாரமே' சொல்லாத ஒரே ஒருநூல் திருக்குறள்தானே? தீவினை விடாது பற்றித் தொடரும். அவை செய்தார் வருந்தியும் திருந்தியும் நல்வினை செய்தும் தான் விடுபட முடியும் என்பது திருக்குறளாயிற்றே? இல்லறத்தானே உலகிற்கு ஆணிவேர், அவனே துறவிக்கும் துணை, இயற்கைக்கு மாறுபட்ட துறவு 'கூடா ஒழுக்கம்' ஆகுமே எனபன நடைமுறையில் இல்லையே? காவி வேட்டி கட்டியவர்கள் எல்லாம் வணங்கத்தக்கவர்கள் ஆவதேகண்கூடாகவுளதே? 'வசூல்ராஜாத் துறவிகள்' பெருகிவிட்டனரே?

எனவே இலக்கியத்தின் எப் பகுதியையும் அஞ்சாது ஆணித்தரமான ஊக்கவுணர்வுடன், நல்வாழ்க்கைக் குறிப்புக்களுடன் தொடர்புபடுத்தியே கற்க வேண்டும்; கற்பிக்கவும் வேண்டும்.

இன்றுள்ள இலக்கியத் திறனாய்வுக்கல்வி, இலக்கியத்தை உருவாக்குவதற்குப் பயன்படும்; அஃது ஒரு பக்கம்.

இலக்கியத்தை வாழ்க்கைக்குப் பயன்படுமாறு கற்பிப்பது பிறிதொரு பக்கம். நாம் பின்னதைப் பெரிதும் மறந்து விட்டோம். அதனால் நாம் வகுக்கும் பாடத்திட்டங்களாலும் கற்கும் - கற்பிக்கும் முறைகளாலும் 'மனிதர்களை' உருவாக்க மறந்துவிட்டோம்.

இன்று ஒப்பியலார் 'மனிதத்துவப் படுத்தும் இலக்கியங்களைப் பற்றி' (Humanization of literature) நிறையவே சிந்திக்கிறார்கள். அவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, நம் இடத்திற்கு வருகிறார்கள் நாமோ அவர்கள் காட்டுகிற வழியில்போய் நமக்குரிய வழி தவறிப் போய்விட்டோம்.

சங்க இலக்கியம்

உலக இலக்கியங்கள் - கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம் எல்லாம் கடவுள்களை மட்டுமோ, கடவுளரும் மனிதர்களுமாக ஊடாட விட்டோ, இயற்கை இகந்த அதிஅற்புத புராண இதிகாசக் கதைகளைக் கூறியோ 'மானிட மதிப்புக்களை' விளக்கச் சுற்றி வளைத்து வருகின்றன.

மனிதர்களை மட்டுமே மையப்படுத்தி, இயற்கை இகந்த உயர்வு நவிற்சிகளையும், மனிதர்களின் சிறப்புக்குத் துணையாகுமளவு மட்டுமே பயன்படுத்தும் உலகச் செவ்வியல் இலக்கியம் நமது சங்க இலக்கியமே ஆகும்.

தொடரும்,

திராவிட மொழியியல்: அறிமுகம்

பேராசிரியர்கி.அரங்கன், தஞ்சாவூர்

திராவிட மொழியியலின் வரலாறு ஃபிரான்ஸிஸ் வொயிட் எல்லிஸ் (Francis White Ellies) என்பவர் ஏ.டி.கேம்ப்பெல் (A.D. Campbell) எழுதிய தெலுங்கு மொழி இலக்கணம் (A Grammer of the Telegoo language) என்ற நூலுக்கு எழுதிய அறிமுகக் குறிப்பிலிருந்து தொடங்குகிறது. அவர் தென்னிந்தியாவின் கிளை மொழிகள் என்று குறிப்பிடக் கூடிய ஒரு குடும்ப மொழிகள் உள்ளன என்று கூறினார். திராவிட மொழிக் குடும்பத்தின் கீழ் 1.தமிழ், 2.தெலுங்கு, 3.கன்னடம், 4.மலையாளம், 5.துளுவம், 6.கொடகு, 7.ராஜ்கமல் (மால்டோ) ஆகிய மொழிகளைப் பட்டியலிட்டார். அவர் திராவிட மொழிகள் என்று குறிப்பிட்டவைகளில் பெரும்பாலானவை தென்னிந்தியாவில் வழங்கப்படுபவை; இருப்பினும் நிலப்பரப்பால் தொடர்பற்ற தென்னிந்திய மொழிகளோடு மால்டோ என்ற மொழியைத் திராவிட மொழி என்று குறிப்பிட்டார். 1844இல் கிறிஸ்டியன் லேசன் (Christian Lassen) பிராகுயி (Brahui) என்ற மொழியைத் தென்னிந்திய மொழிகளோடு தொடர்புடையது என்று கூறினார். 1847இல் ஜேனல் ஆப் ஆசியாடிக் சொசைட்டி ஆப் பெங்கால் (Journal of Asiatic Society of Bengal) என்ற இதழில் கோண்டுகளின் மொழிகள் (Languages of Gonds) தென்னிந்திய மொழிகளோடு தொடர்புடையவை என்றும் கோண்டு மொழிகளில் உள்ள சொற்களோடு ஒத்திருப்பதைச் சுட்டிக் காட்டினார். மேலும் அவர் தென்னிந்திய மொழிகள் ஒன்றுக்கொன்று உறவு உடையவை என்றும் வடமேற்கு, வடகிழக்கு ஆகிய பகுதிகளில் இம் மொழிகளுக்குத் தூர உறவினர்கள் உள்ளனர் என்றும் கூறுகிறார். அவை இந்தோ-ஆரிய மொழிகளிலிருந்து தனித்தவை.

தென்னிந்தியாவிலும் மத்திய வட இந்தியாவின் சில பகுதிகளிலும் வழங்கப்பட்டு வரும் ஒரு குடும்ப மொழிகளை

திராவிடம் என்று முதன் முதலில் குறிப்பிட்டவர் ராபர்ட் கால்டுவெல் ஆவார். 1856ஆம் ஆண்டிலேயே முக்கியமான பகுதிகளை வரையறுத்துக் கொண்டதால், கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணக் கூறுகளை மிகத் திடமாக அறிந்திருந்தார். அதற்கு பின்னால் வந்தவை அனைத்தும் அவருடைய பணிக்குக் கூடுதலாக அமைந்தனவே ஒழிய அதை பதிவீடு செய்வன அல்ல என்று ஜூல்ஸ் பிளாக் (1954) கூறுகிறார். கால்டுவெல் பின்வரும் மொழிகளைத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்கிறார். 1.தமிழ், 2.மலையாளம், 3.தெலுங்கு, 4.கன்னடம், 5.துளு, 6.குடகு/கூர்க், 7.தோடா, 8.கோதா, 9.கோண்டு, 10.கோந்த்/கூ, 11.ஒராவொன், 12.ராஜ்மகல்.

மத்திய திராவிட மொழிகளிலிருந்து தரவுகளைக் கொண்டு வந்து திராவிட மொழிகளை ஒப்பிட்டு ஜூல்ஸ் பிளாக் (Jule Bloch) கால்டுவெல்லுக்குப் பிறகு 1954-இல் நூலொன்றை வெளியிட்டார். மூல திராவிட மொழியின் பால் ஒருங்குமுறை குறித்துக் கால்டுவெல்லின் கருத்திலிருந்து அவர் மாறுபடுகிறார். தென்னிந்தியாவில் காணப்படும் மூவகைப் பால் ஒருங்குமுறை பின்னால் வந்தது என்றும் ஒருவகைப் பாகுபாடே பழையது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பால் ஒருங்குமுறைப் பற்றி மூவகை கருத்துநிலைகள் உள்ளதை நாம் பார்க்கலாம். மூலத்திராவிட மொழியில் பால் பாகுபாடு இல்லை என்று கால்டுவெல் கருதுவதாகத் தோன்றுகிறது. ஆனால் ஜூல்ஸ் பிளாக் மத்திய திராவிட மொழிகளில் காணப்படும் பால் ஒருங்குமுறையே மூலத் திராவிட மொழியினது என்கிறார்.

திராவிட மொழியியலில் டி.பர்ரோ அவர்களின் ஆய்வும் எம்.பி.எமனோ அவர்களின் ஆய்வும் முக்கியத்துவம் வாய்ந்தவை. பர்ரோ மத்திய திராவிட மொழிகளை ஆய்வதில் கவனம் செலுத்தினார். பட்டாச்சார்யா என்பவருடன் இணைந்து பர்ஜி (Parji) என்ற மொழியை ஆராய்ந்தார். இருவரும் வண்ணனை இலக்கணம் ஒன்றை பர்ஜி மொழிக்கு

உருவாக்கினார்கள். பர்ரோ பெங்கு என்ற புதிய மொழியைக் கண்டுபிடித்து அதற்கு ஒரு வண்ணனை இலக்கணம் எழுதினார். திராவிட ஒலியனியல் குறித்துத் தொடர்ந்து பல கட்டுரைகள் எழுதினார். மூலத் திராவிட மொழியில் ஒலிப்பிலா அடைப்பொலிகளும் ஒலிப்புடை அடைப்பொலிகளும் வேற்றுநிலை வழக்கில் இல்லை. மூலத் திராவிட மொழியில் ஒலிப்பிலா அடைப்பொலிகள் மட்டும் ஒலியன்களாக இருந்தன என்று பர்ரோ கருதினார். மூலத் திராவிட மொழியில் ய் என்பதை ஒரு ஒலியனாகக் கருத இயலாது என்கிறார் அவர். இ+அ> ய என்று காட்டப்படுகிறது. திராவிட மொழிகளிலிருந்து பல சொற்களைக் கடனாகப் பெற்றுள்ளது சமஸ்கிருதம் என்கிறார் பர்ரோ.

தோடா, கொலாமி, பிராகுயி ஆகிய மொழிகளை எமனோ அவர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளார். தமிழகத்தில் நீலகிரி மலைப்பகுதியில் வழங்கிவரும் தோடா என்ற மொழியில் விரிவான களப்பணியை மேற்கொண்டார். கலிஃபோர்னியாப் பல்கலைக்கழகத்தால் 1955ஆம் ஆண்டு கொலாமி பற்றிய நூலொன்று வெளியிடப்பட்டது. அவர் பர்ரோவிடமிருந்து மூலத் திராவிட மொழியிலிருந்த பால் ஒழுங்குமுறைப் பற்றி மாறுபடுகிறார். அவர் தெலுங்கு, குருக், மால்டோ போன்ற மொழிகளில் காணப்படும் பால் ஒருங்குமுறை மூலத் திராவிட மொழியிலும் இருந்திருக்கலாம் எனக் கருதுகிறார். ஆனால் பர்ரோவும் பட்டாச்சார்யாவும் தங்களுடைய பர்ஜி மொழி இலக்கணத்தில்

தமிழ் - கன்னட மொழிகளில் உள்ள மூவகைப் பால் ஒருங்குமுறையே மற்றைய மொழிகளிலும் இருந்தது என்பது தெளிவு. இருவகைப் பால் ஒருங்குமுறை தெலுங்கிலும் மற்றைய மத்திய திராவிட மொழிகளிலும் பின்னால் ஏற்பட்ட மாற்றம் என்று குறிப்பிடுகிறார்கள்.

மூவகைப் பால் ஒருங்குமுறை



இருவகைப் பால்பாகுபாடு



பர்ரோவாலும் எமனோவாலும் வெளியிடப்பட்ட திராவிட வேர்ச்சொல் அகராதி திராவிட மொழியியல் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்.

திராவிட மொழியியலில் ஐரோப்பிய நாட்டு அறிஞர்களின் ஆய்வுப் பணிகளால் உந்தப்பட்டு இந்திய நாட்டு அறிஞர்கள் சிலரும் இதில் ஆர்வம் காட்டினார்கள். சுதந்திரத்திற்கு முந்தைய காலகட்டத்தில் குறிப்பிடத்தக்கவர் எல்.வி.இராமசாமி ஐயர். திராவிட ஒலியனியல் குறித்துப் பல அரிய கட்டுரைகள் அவர் எழுதினார். மலையாள உருவனியலின் படிமுறை வளர்ச்சி என்ற ஆய்வு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பிஹெச். கிருஷ்ணமூர்த்தியின் தெலுங்கு வினையடிகள் (Telugu Verbal Bases) என்ற நூல் திராவிட மொழியியலில் மிக முக்கியமாகக் குறிப்பிடத்தகுந்தது. மூலத் திராவிடத்தின் ஒலியனியலை மீட்டுருவாக்க சீரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கால்டுவெல்லுக்கும் ஜூல்ஸ் பிளாக்குக்கும் அடுத்து கிருஷ்ணமூர்த்தியின் தெலுங்கு வினையடிகள் திராவிட மொழியியலில் முக்கிய மைல் கல்லாகக் கருதப்படுகிறது. பால் ஒருங்குமுறையைக் குறித்தும் கிருஷ்ணமூர்த்தி (1961:265) எமனோவின் நிலைப்பாட்டை ஆதரிக்கிறார். எஸ்.கே.சட்டர்ஜியுடன் மாறுபாடு கொண்டு மூலத் திராவிட மொழியில் ஒலிப்பிலா அடைப்பொலிகளை ஒலியன்களாக மீட்டுருவாக்கம் செய்கிறார். சட்டர்ஜி (1954) மூலத் திராவிடத்தில் ஒலிப்பிலா அடைப்பொலிகளும் ஒலிப்புடை அடைப்பொலிகளும் ஒலியன்களாக இருந்தன என்று கருதுகிறார். இது பிளாக்கின் கருத்தோடு இசைந்து போகிறது.

திராவிட மொழியியல் வரலாற்றில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் அவர்கள். திராவிட மொழியியல் துறையில் பணியாற்றிய ஆய்வாளர்கள் வளமையான இலக்கிய மரபைக் கொண்ட திராவிட மொழிகளினுடைய வரலாற்றின் தேவையை உணர ஆரம்பித்தார்கள். அமெரிக்காவில் உள்ள சிகாகோ

பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் மீனாட்சிசுந்தரம் அவர்கள் தமிழ்மொழி வரலாறு குறித்து 10 சொற்பொழிவுகள் ஆற்றினார். இச்சொற்பொழிவுகள் பின்னர் 1965இல் டெக்கான் கல்லூரியால் (A History of Tamil Language) தமிழ் மொழி வரலாறு என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. திராவிடக் குடும்ப மொழிகள் பற்றியும் திராவிடக் குடும்ப மொழிகளில் தமிழ் பற்றியும் இரண்டு அதிகாரங்கள் விரிவாகப் பேசுகின்றன. ய என்பது மூலத்திராவிடத்தில் ஒலியன் இல்லை என்ற பர்ரோவின் கருத்துடன் இவர் உடன்பட்டு மேலும் தக்க சான்றுகள் அளிக்கிறார். பால் ஒருங்குமுறை என்பதில் கால்டுவெல்லின் கருத்தை ஆதரிக்கிறார். தன்மையிலும் முன்னிலையிலும் ஒருமை/பன்மை வேறுபாட்டைத்தான் நாம் தமிழில் காண்கிறோம். தற்காலத் தமிழில் மூவகை (ஒருமையில்) வேறுபாட்டைப் படர்க்கையில் நாம் கண்டாலும் பழைய தமிழில் எண் வேறுபாடு மட்டும் இருந்தது.

	ஒருமை	பன்மை
தன்மை	யான்	யாம்/ நாம்
முன்னிலை	நீ	நீம்/நீவிர்/ நீயீர்
படர்க்கை	தான்	தாம்

பழைய தமிழிலிருந்து பால் வேறுபாடு இல்லை என்பதற்கு நிறைய சான்றுகள் தருகிறார்.

பி.எஸ்.சுப்பிரமணியன் அவர்கள் திராவிட உருபனியலுக்குத் தன்னுடைய ஆய்வை விரிவுபடுத்தினார். 1971ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் திராவிட வினை உருபனியல் என்ற நூலை வெளியிட்டது. செ.வை.சண்முகம் அவர்கள் திராவிடப் பெயர்கள் என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டார். அறிஞர்கள் திராவிட மொழிக் குடும்ப மொழிகளை உட் குழுவாக வகைப்படுத்துகின்ற ஆய்வில் கவனம் செலுத்தினார்கள். இந்தச் சூழலில் ஸ்வெலபில்லின்

திராவிட ஒப்புமை உருபனியல் என்ற நூலையும் திராவிட ஒப்புமை ஒலியனியல் என்ற நூலையும் நாம் குறிப்பிட வேண்டும். கொரகா (Koraga)மொழியை எந்தக் குழு வகையில் அடக்குவது என்ற பிரச்சனையில் ஒப்பீட்டாளர் எதிர் கொள்ளும் பிரச்சனையை டி.என்.எஸ்.பட் குறிப்பிடுகிறார். மெல்லினம் அடுத்த ஒலிப்பிலா வெடிப்பொலிகள் (Post-nasal Voiceless Plosives) என்ற என்.குமாரசாமிராஜாவின் நூல் திராவிட மொழியியலாளர்களின் கவனத்தைக் கவர்ந்தது. சேய் மொழிகளில் காணப்படும் மெல்லினம் + வல்லினம் (NP) என்ற சேர்க்கையையும் வல்லினம் + வல்லினம் (PP) என்ற சேர்க்கையையும் விளக்க மூலத் திராவிட மொழியில் மெல்லினம் + வல்லினம் + வல்லினம் (NPP) என்ற சேர்க்கையை மீட்டுருவாக்கினார். ராஜாவின் ஆய்வு திராவிட மொழியியலாளர்களின் வரவேற்பைப் பெற்றது.

திராவிட மொழியியலில் மூன்று வகையான ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்களை நாம் காணலாம். திராவிட ஒப்பிலக்கணம் ஆழமான ஆய்வை மேற்கொள்ள வேண்டுமானால். இரண்டு வகையான ஆய்வுகள் உள்ளீடாக அமைய வேண்டும். முதலாவது, விரிவான நம்பத்தகுந்த இலக்கணங்கள் ஒவ்வொரு திராவிட மொழிக்கும் எழுதப்பட வேண்டும். இக்குறிக்கோள் நிறைவேற, பல அறிஞர்கள் சிறுபான்மை மற்றும் பழங்குடி மக்களின் திராவிட மொழிகளை ஆராய்ந்தார்கள். நாம் முன்பே குறிப்பிட்டது போல் மேலைநாட்டு அறிஞர்களும் நம் நாட்டு அறிஞர்களும் விரிவான களப்பணி மேற்கொண்டு மொழிகளை ஆராய்ந்தார்கள். பர்ரோ, பட்டாச்சார்யா, எமனோ ஆகியோருக்குப் பிறகு, சுப்பிரமணியம், கிருஷ்ணமூர்த்தி, ராமகிருஷ்ணரெட்டி ஆகியோர் பல மத்திய திராவிடப் பழங்குடி மொழிகளை ஆராய்ந்து அவற்றிற்கு விரிவான இலக்கணங்கள் எழுதினார்கள். 1976இல் பர்ரோ மண்டா (Manda) என்ற மொழியைப் புதிதாகத் திராவிட மொழிக் குடும்பத்தில் சேர்த்தார். ராமகிருஷ்ணரெட்டி விரிவான களப்பணி மேற்கொண்டு இண்டி (Indi) என்ற புதிய மொழியையும் அவி/

அவெ (Awi/Awe) என்ற புதிய மொழியை விவரித்து இலக்கணங்கள் எழுதினார். இருளா (Irula) என்ற மொழியை 1996இல் டிஃப்ளாத்தும் (Diffloth) பின்னர் ஸ்வெலபிலும் பெரியாழ்வாரும் ஆராய்ந்தார்கள். குறும்பர் மொழிக்கு உபாத்தியாயா ஒரு வன்னனை இலக்கணம் எழுதினார். தென்னிந்தியாவில் பேசப்படும் முக்கிய மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளுக்கு மொழி வரலாறு எழுதுவது அடுத்து முக்கியப் போக்காகத் திராவிட மொழியியலில் அமைந்தது.

திராவிட மொழிகள்

திராவிட மொழியியல் அறிஞர்களிடையே திராவிட மொழிக் குடும்பத்தில் எத்தனை மொழிகள் உள்ளன என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. சில மொழிகளின் நிலை குறித்துக் கருத்து வேறுபாடு இருப்பதால் மொழிகளின் எண்ணிக்கையில் ஒத்த கருத்து ஏற்படவில்லை. சிலர் சில மொழிகளைத் தனித்த மொழிகள் என்றும் வேறு சிலர் அவை கிளைமொழிகள் என்றும் கருதுவதால் கருத்து வேறுபாடு நிலவுகிறது. 23 மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்து தற்காலிகமாக நிலவுகிறது. அவை 1.படகா, 2.இருளா, 3.கன்னடம், 4.குடகு, 5.கோதா, 6.மலையாளம், 7.தமிழ், 8.தோடா, 9.துளு, 10.கோண்டி, 11.கொந்தா, 12.குயி, 13.குவி, 14.மண்டா, 15.பெங்கோ, 16.தெலுங்கு, 17.கதபா, 18.கொலாமி, 19.காய்கி, 20.பர்ஜி, 21.பிராகுயி, 22.குருக், 23.மால்டோ. பெரும்பாலான மொழிகள் தென்னிந்தியாவில் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்கில் ஆப்கானிஸ்தானிலும் பாக்கிஸ்தானிலும் கிழக்கில் நேபாளத்திலும் திராவிட மொழிகள் பேசுவோர் பரவியிருக்கிறார்கள். பெல்லாரி, பர்குண்டி, கைகுடி, கொரகா, கொரவா, குரபா, ஷோலிகா, எரவா, எருகளவா ஆகியவை தனிமொழிகளா அல்லது கிளைமொழிகளா என்பது தீர்மாணிக்கப்படாமல் கருத்து வேறுபாடு உள்ளது என்று ஸ்வெலபில் (1990) சுட்டுகிறார். இதே போன்று அவே, இண்டி,

சவரா ஆகிய மத்திய திராவிட மொழிகளின் நிலையும் அறுதியிடப்படவில்லை.

திராவிட மொழிகளின் உட்குழுக்கள்

திராவிட மொழிகளை மூன்று உட்குழுக்களாகப் பிரிக்கலாம் அவை: (1) தென்திராவிடம்; (2) மத்திய திராவிடம்; (3) வடதிராவிடம். பிராகுயியும் திராவிட ஒப்பிலக்கணமும் (Brahui and Dravidian Comparative Grammar) என்ற எமனோவின் நூல் வட திராவிட உட்குழு உள்ளது என்ற கருத்திற்கு அடித்தளமிட்டது. வட திராவிடத்தைச் சேர்ந்த மொழிகள் * என்ற மாற்றத்தைக் கொண்டிருக்கின்றன. திராவிட மொழிக் குடும்பத்தில் தெலுங்கின் இடத்தை அறுதியிட தெலுங்கு வினை அடிகள் என்ற நூலில் கிருஷ்ணமூர்த்தி முயற்சி மேற்கொண்டார். தெலுங்கு தென்திராவிட மொழிகளான தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தாலும் மத்திய திராவிட கோண்டி-குயி மொழிகளின் உட்குழுவைச் சார்ந்தது என்பதை அவர் தெரிவித்தார். எமனோ தென்திராவிடத்தைச் சேர்ந்த மொழிகளை அறுதியிட முயற்சி செய்தார். துளுவின் இடம் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. திராவிட மொழிகளின் உட்குழுக்களைப் பின்வருமாறு காட்டலாம்.


மூ.தி
தெ.தி
ம.தி
வட திராவிடம்
தமிழ்
கன்னடம்
துளு
தெலுங்கு
குயீ
கொலாமி
பர்ஜி
குருக்
மால்டோ
பிராகுயி

தென்திராவிட மொழிகளின் பிரிவை



இவ்வாறு காட்டலாம்

தென் திராவிட மொழிகளைப் பிற திராவிட மொழிகளிலிருந்தும் பிரித்துணரக் கூடிய சில கூறுகளை நாம் காட்டலாம்: (1) சொல்லின் முதலில் அண்ண அடைப்பொலி கெடுதல்; (2) அஃறிணை ஒருமையிலிருந்து பெண்பால் ஒருமை தனியாக வளர்ச்சியடைதல்; (3) தெலுங்கு போன்ற மொழிகளில் காணப்படும் Matathesis தென்திராவிடத்தில் காணப்படுவதில்லை.

★ சுப்பு > உப்பு

★ சி > ஈ / இ

★ இல > லிஅ > லெ

மூலத் தென் திராவிடத்தில் காலம் காட்டும் இடைநிலை இல்லை என்ற கருத்தை மீனாட்சி சுந்தரம் அவர்கள் 1965:27) கொண்டிருந்தார்.

பின்னர் வந்த ஆய்வுகளின் அடிப்படையில் தென் மத்திய திராவிட உட்குழு என்ற பிரிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது.



தென் மத்திய திராவிட மொழிகள் சில மாற்றங்களை அடைந்துள்ளன:

(i) * i, / * u > * e, * o / Ca

i * c > s > h > /

i உளப்பாட்டுத் தன்மை ★ nam

(Sharing of the innovated I person inclusive plural)

கொலாமி - பர்ஜி மத்திய திராவிட உட்குழுவை அமைக்கிறது.



கிருஷ்ணமூர்த்தியால் சுட்டப்பட்ட திராவிட மொழிக் குடும்பத்தின் உட்குழுக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



திராவிட மொழியியல் பல பிரச்சனைகளுக்குத் தீர்வைக்காண வேண்டியுள்ளது. திராவிட மொழியியலார் விறுவிறுப்பாக ஆய்வை மேற்கொள்ள வேண்டிய சூழல் உள்ளது.

Bibliography

Bhat, D.N.S. (1971). The Koraga Language. Linguistics Survey of India series, Pune

Bloch, Jules (1954). The Grammatical Structures of Dravidian Language. Deccan College: Pune

Burrow, T. (1968). Collected Papers on Dravidian Linguistics. Annamalai University Annamalainagar.

Caldwell, Robert. (1961). A Comparative Grammer of the Dravidian or South Indian Family of Languages. University of Madras. (Reprint)

Chatterji, S.K. (1954). "Old Tamil, Ancient Tamil and Primitive Dravidian" in Indian Linguistics. Vol. Pp. 1-19

Diffloth, G. (1969). The Irula Language, A close Relative of Tamil. (Ph.D. diss.) University of California: Los Angeles.

Emeneau, M.B. (1955). Kolami, a Dravidian Language. University of California Press. Berkeley and Los Angeles.

---------------------------- (1969). "The non-literary Dravidian Languages" in current Trends in Linguistics (ed.) T.Sebeok. Mouton & Co.: The Hague.

---------------------------------- (1970) Dravidian Comparative Phonology: A Sketch. Annamalai University, Annamalainagar.

Krishnamurthi, Bh.(1961). Telugu Verbal Bases: A Descriptive and Comparative Study. University of California: Berkeley.

-------------------------------- (1969). "Comparative Dravidian Studies" in Current Trends in Linguistics. ed.) T.Sebeok. Vol.Mouton & Co,: The Hague.

--------------------------------- (1992). "Dravidian in International Encyclopaedia of Linguistics. (ed.) William Bright. Oxford University Press: Oxford. Pp.373-78.

Kumaraswami Raja, N. (1969). Post-nasal Voiceless Plosives in Dravidian. Annamalai University, Annamalainagar.

Meenakshisundaran, T.P. (1965). A History of Tamil Language. Decean College: Pune

---------------------------- (1965 b) "The History and Development of Gender in Dravidian Language" in Prof.T.P. Meenakshisundaran Sixty-Fifth Birthday Commemoration Volume. Annamalainagar.

Shanmugam, S.V. (1967). Dravidian Nouns (A Comparative Study). Annamalai University: Annamalainagar.

Subramanyam, P.S. (1969). "The Central Dravidian Languages" in Dravidian Linguistics. Annamalai University: Annamalainagar.

------------------------ (1971) Dravidian Verb Morphology. Annamalai University: Annamalainagar.

Zvelebil, K.V. (1967). Comparative Dravidian Phonology, Mouton & Co.: The Hague.

-------------------------- (1973) The Irula Language. Weisbaden

---------------------------- (1977). A Sketch of Comparative Dravidian Morphology (part one) Mouton & Co.: The Hague.

---------------------------------- (1979) The Irula (Erla) Language-Part II. Weisbaden

----------------------------------(1990). Dravidian Linguistics: An Introduction. Pondicherry Institute of Linguistics and Culture. Pondicherr

பெரியபுராணக் காப்பிய ஒருமை

பேராசிரியர் சுப.அண்ணாமலை

பு. வேடமே மெய்ப்பொருள்

"நேயம் மலிந்தவர் வேடமும்.... அரன்" என்று கூறும் சிவஞானபோதம். சிவபிரானிடத்து நிறைந்த அன்புடையோரின் புறக்கோலமும் சிவனது திருவுருவமே என்பது இதன் கருத்து. இது அன்பின் பெருமை. திருநீறும் உருத்திராட்சமும் சிவக்கோலமாகும். இக்கோலத்தினைப் பூண்ட சிவனடியார் சிவனேயாவர். இக்கருத்துடன் சேக்கிழார் அமைக்கும் தொடர். "வேடமே மெய்ப்பொருள்" என்பது. மெய்ப்பொருள், சிவன்.

மெய்ப்பொருள் நாயனார் என்றே ஒரு திருத்தொண்டருக்குப் பெயர். அவருக்கு முன்னும் பின்னுமாக மூன்று தொண்டர்கள் போற்றப்படுகின்றனர். இந்நால்வரும் சிவனடியாரைச் சிவன் எனவே கருதி, அன்பு செய்து தொண்டாற்றினர். அவருள் ஒருவர் சிவனடியாரின் பசி கண்டு, தம் பசி மறந்தார். ஒருவர் பகைவனின் சிவவேடம் கண்டு பகை மறந்தார். மற்றொருவர் அடியார்க்கு இறைவனே இணையில்லை என்று, பக்தி மறந்தார். பிறிதொருவர் அடியார்க்கு அளித்த வாக்கைக் காக்கத் தம்மையே மறந்தார்.

வேளாண்குடியினரான இளையான்குடி மாறனார் சிவனடியாரின் பசி தீர்த்தலை வாழ்க்கைத் தொண்டாகக் கொண்டார். அடியார்களிடம் அவர் கொண்டிருந்த அன்பினைச் சேக்கிழார்,

"நீரின் மல்கிய வேணியார் அடியார் திறத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தை"

என்பார். சீர் நிறைந்த அன்பு, அது யாரினும் மேம்பட்டது, எளிதில் அசைந்து தளராதவாறு நெஞ்சில் காலூன்றி நின்றது. இம் மூன்று அடைமொழிகளால், இந்நாயனார் சிவனடியார்க்காக

எதையும் செய்யக்கூடியவர் என்பதை உணரலாம்.

வறுமையும் அவரது அன்பை நிலைகுலையச் செய்ய இயலவில்லை. செல்வம் சுருங்கினும் அந்த வள்ளல் மனஞ்சுருங்காமல் தமது பணியைக் குறைவறச் செய்து வந்தார். மனைப் பொருளெல்லாம் விற்றார். கடன்கொண்டார். அது, தம்மையே விற்றுத் தீர்க்குமளவு பெருகியது.

ஒரு மழைக்கால நள்ளிரவு, கணவனும், மனைவியும் இரண்டு நாளாக உண்ணவில்லை. பசி காதை அடைத்தது. நெடுநேரம் உறங்காமலிருந்து, பின்பு வாயிற் கதவடைத்துப்படுத்தனர். அந்நேரத்திலும் யாரேனும் அடியார் வரக்கூடும் என்ற நினைப்பு! அடைத்த கதவைப் பார்த்து, அவர் ஏமாற்றத்துடன் போகக்கூடாது. அவருக்குத் தண்ணீரேனும் அளிக்க வேண்டும் என்ற ஆர்வம்!

நாயனார் ஐயுற்றவாறே, கதவு தட்டப்பட, அதனைத் திறந்தபோது ஒரு சிவனடியார் எதிரே நின்றார். பசியை மறந்தார் நாயனார். செல்வம் உள்ள காலத்தில் எவ்வாறு அன்போடு இன்சொல் கூறி விருந்தாளியை வரவேற்றாரோ, அவ்வாறே வரவேற்றார். இதைச் சேக்கிழார், பண்புற வேரித்தாரான் விருந்தெதிர் கொண்டனன் என்று குறிப்பு மொழியால் கூறுகின்றார். வேரித்தார் மணம் மிக்க மாலை. இத்தொடர் செல்வக் காலத்தைக் குறிப்பாகச் சுட்டும்.

வாட்டும் பசியை அறவே மறந்து, அடியவரின் பசி கண்டு துடிதுடித்து நின்ற மாறனார், மனைவியாரிடம், ஏற்கனவே நமக்கு உணவில்லை; ஆயினும் இவரது பசியைத் தீர்த்தேயாக வேண்டும். அதற்கு என்ன வழி? என்று கேட்கின்றார். அவர் கூறியவாறு அன்று காலையில் தமது வயலில் விதைத்த நெல்லை-மழையால் தரையிலிருந்து வெளிப்பட்டு நீரில் மிதந்தவற்றை வாரிக்கொண்டு வந்தார். நெருப்பு மூட்டி எரிக்க விறகில்லாமையால் வீட்டுக் கூரையின் கைமரங்களை அறுத்துக்

கொடுத்தார். கறி சமைக்கவும் காய்கள் இல்லை என்று மனைவி கூற, வீட்டுக் கொல்லையில் முளைவிட்டிருந்த கீரையை வேருடன் பறித்துக் கொடுத்தார். இச்செயல்கள் யாவும், நாயனார் அடியார் பசியைத் தீர்த்தாக வேண்டும் என்ற கருத்தில் உறுதியாக இருந்தமையைக் காட்டும். அவ்வுறுதியால், தாம் பலநாள் பட்டினி கிடந்த நலிவையும், மழைக்கால நள்ளிரவில், இருளில் வயல்வெளிக்குச் சென்று, தமது வயலை அடையாளம் கண்டு நெல்லைக் கொண்டுவரும் துன்பத்தையும் பொறுத்துக்கொண்டார். வீட்டுக்கூரை சிதைவுறுவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அடுத்த போகத்திற்கு விதைத்த நெல்லையும், தியாகம் செய்தார். இத்துணையும் அடியார் பசி தீர்க்க! இவை உலக நடைமுறைக்கு மாறானவை. ஆதலின், இவரும் இயற்பகையே.

விதைநெல் நெற்பயிரை விளைவிக்கும். சிறுவிளக்குப் பெருஞ்சுடரை ஏற்றும். அன்பு அன்பை விளைவிக்கும். சிவபெருமானிடம் அன்பு கொண்ட அடியார்கள், அவ்வன்பால் மக்களையும் ஈர்த்தனர் மக்கட்கும் அவர்களிடம் அன்பு விளைந்தது.

சேதி நாட்டரசராம் மலையமான்களின் வழித்தோன்றலாகிய ஒருவர், சிவனடியார்பால் மிக்க அன்பு கொண்டார். அதனால், அடியாரை மட்டுமின்றி, அவர் திருக்கோலமாகிய திருநீறு-கண்டிகைப் பொலிவையும் நேசித்தார். அவ்வேடத்தை யார் மேற்கொண்டாலும், அவரை ஆராயாமல், சிவனடியாரென்றே கொண்டு அன்பு செய்தார். அத் திருவேடத்தின் தூய்மையையும், உயர்வையும் எப்போதும் சிந்தித்து, அக்கோலம் தம் ஆன்மநாயகரை அப்பரமேச்சுரனை நினைவூட்டுவதை உணர்ந்தும், "பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்களாய்" விளங்குபவர் அடியார் என்பதை நேரில் கண்டும் இன்புற்று வந்தார். தேடிய செல்வமெல்லாம் ஆடும் நாயகன் அடியார்க்கு உரியன என்று, அவர்கள் வந்தபோதெல்லாம் வாரி வழங்கி மகிழ்ந்தார்.

அவர் நாட்டை வென்று அடிப்படுத்தக்கருதிய அடுத்த நாட்டு மன்னன், அவரோடு பன்முறை போரிட்டுத் தோற்றான். அவரைக் கொல்வதே வெல்வதாகும். என்று எண்ணமிடத் தொடங்கினான். வீர வழியைப் புறந்தள்ளி, வஞ்சகச் சூழ்ச்சியால் கொல்லக்கருதினான். அவர் சிவனடியாரிடம் அன்பு கொண்டமையை அறிந்திருந்தமையால், சடைமுடிகட்டித் திருநீறு பூசிக் கொண்டான். விளக்கேற்றி வைத்தாலும், இருள் அதன் அடியில் மறைந்து நிற்கும். அதுபோல், அவன் பூசியது தூய வெண்ணீறே ஆயினும், அவன் மனத்தில் வஞ்சகம் நின்றது.

மை பொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்

என்பார் சேக்கிழார். புனையும் போதே பொய்த்தது என்பார்; பொய் தவவேடம் என வினைத்தொகை கூறினார். அது பொய்த் தவவேடம் அன்று. ஏனெனில், அவன் தவத்தையே அறியான். அதுகாறும் பொய்த் தவமும் செய்ததில்லை. ஆயின், நீறு பூசும் போதே பகைவனை வஞ்சிக்க வேண்டும் என எண்ணியவாறே பூசினான்.

முத்தநாதன் என்பது அவன் பெயர் அன்று. முக்தன் என்னும் வடசொல் முத்தன் எனத் தமிழில், மூடன் என்னும் பொருளில் வழங்கியது என்பார் திரு.வி.க. முத்தநாதன் என்பதால், அவன் மூடர்களின் தலைவன் எனக் குறித்தார் சேக்கிழார் என்பார் அவர். வீரத்தால் போரிட்டன்றி, வஞ்சகத்தால் வெல்லக்கருதியதும், கொல்வதே வெற்றியென எண்ணியதும் மூடத்தனத்தின் கொடுமுடியன்றி வேறென்ன?

அவன் சேதிநாட்டை அடைந்து, அரண்மனைக்குத் தொலைவில் வந்தபோதே, மன்னனால் அடியாரை வணங்கப் பழகிய வாயில்காவலர், உடையவரே வந்தார். என, மிக்க பணிவுடன் உள்ளே விடுத்தனர். ஒரு தடையுமின்றி மன்னனின்

தனியிடத்திற்கே சென்றுவிட்டு பகைவன், அம்மண்டபத்தின் வாயிலில், தன்னைத் தடுத்து நிறுத்திய மெய்காவலன் தத்தனையும், நான் மன்னனுக்கு உறுதிப்பொருள் கூற வந்துள்ளேன். என்று கூறி நிறுத்திவிட்டு உட்புகுந்தான். ஐயம் கொண்ட தத்தன் எதுவும் நிகழக்கூடும் என்று விழிப்புடன் இருந்தான்.

தேவியால் துயிலுணர்ந்த மன்னன் சிவவேடம் கண்டு, எழுந்து, எதிரே சென்று வணங்கினான். போர்க்களத்தில் பன்முறை கண்ட முகந்தான் எனினும், அவனுள்ளம் சிவவேடத்தையே கருதியது. பகைவன் என்ற கருத்தைச் சிவவேடத்தின்பாற் கொண்ட மதிப்பு, அறவே துடைத்தது.

வேடத்தானின் சொல்மீது தேவியையும் நீங்கப்பணித்துப் பணிந்த மன்னனை, புதிய ஆகமம் எனப் பொய்யாகக் காட்டிய புத்தகக்கட்டை அவிழ்ப்பவன்போல் வஞ்சகத்தை அவிழ்த்து, அதனின்று குத்தீட்டியை உருவிக் கொன்றான். சிவனடியார் செய்ததே இசைவு; ஏனெனில் சிவவேடமே மெய்ப்பொருள் - வேடமே சிவம் என, மன்னன் தற்காத்துக் கொள்ளாமல், தொழுது வீழ்ந்தான். வாளை ஓங்கி ஓடிவந்த தத்தனையும், தத்தா நமர் என்று கூறித் தடுத்தான். அது மட்டுமா? அச்சிவனடியானை நாட்டெல்லை வரை பாதுகாப்பாக உடன் சென்று விட்டுவரப் பணித்தான். அவன் அப்பணி முடித்து மீண்டு செய்தி கூறுவதைக் கேட்க, அந்த நல்ல உயிர் காத்திருந்தது! இதுவல்லவோ தவம்? இதுவல்லவோ அன்பு? இதுவல்லவோ தியாகம்?

பகைவன், தான் வென்றுவிட்டதாக எண்ணியிருப்பான் ஆனால், மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்றார் என்கிறார். சேக்கிழார். வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருள் என்றார் நம்பியாருரரும் வந்திருப்பவன் பகைவன் என்று தெரிந்தும், அவனது வஞ்சகத்தை உணர்ந்தும், சிவவேடத்தின்பால் வைத்த மதிப்பால், உயிரைத் தியாகம் செய்தார் இம்மன்னர். நில்லாத உயிரை விட, நிலையான

சிவவேடம் உயர்ந்தது என்று கருதினார். அவ்வேடத்தை மதிப்பது என்ற நமது கொள்கையில், பகைவனின் வஞ்சக எண்ணம் நன்கு தெரிந்தபோதும், வென்றார். ஏமாற்றும் வஞ்சகத்திற்குப் பலியாகிவிடவில்லை. அன்றில்லாவிடினும், என்றேனும் ஒருநாள் சிவவஞ்சகன், தன் செயலுக்கு நாணியிருப்பான். அவனைப் பொறுத்தவரை, அவரது செயலின் வெற்றி அது.

சிவவேடம் கண்டு, தமது பசியையும் மறந்து வாழ்வையும் தியாகம் செய்யத் துணிந்த மாறனாரை அடுத்து, அவ்வேடத்தின் மெய்ம்மையைத் தம் உயிரைக் கொடுத்து எடுத்துக்காட்டிய மெய்ப்பொருள் வேந்தர் போற்றப்படுதல் பொருத்தமே ஆகும்.

வேதங்கள் தேடியும் உணரவியலாதவனாகிய சிவன், அடியவர் திருக்கூட்டத்தில், அவர்களின் அன்பை அனுபவித்துக்கொண்டு விளங்குகிறான் என்பர். அடியார் திருக்கூட்டத்தை வணங்கிய பிறகே சிவனை வணங்குவது எனக் கொள்கை பூண்டார் ஒரு சேரநாட்டு அடியார். விறன்மிண்டர் என்பது அவர் பெயர். இவர் சேரநாட்டுப் பதிகள் எங்கும் சென்று, அப்பதிகளின் அடியார் கூட்டத்தை வணங்கினார். சமய குரவர்களுள், ஞானசம்பந்தர், நாவரசர் ஆகிய இருவரின் இயக்கத்தால் நாடெங்கும் அடியார் திருக்கூட்டங்கள் தோன்றியமைக்கு இவ்வரலாறு சான்றளிக்கிறது. நம்பியாரூரரின் சம காலத்தவரான விரன்மிண்டர் திருவாரூர்க்கும் சென்று, தேவாசிரிய மண்டபத்தில் அடியார்களை வணங்கி, புற்றெழுந்த பெருமானை வணங்கி வழிபட்டு வந்தார். அதுகாலை நம்பியாரூர் அடியார்களை வணங்காமல் இறைவனை வணங்கித் திரும்புதல் கண்டு, வன்றொண்டன் புறகு என்றார். சிவநெறிக்குப் புறம்பானவர் என்பது இதன் பொருள். அதைக்கேட்ட அன்பர் சிலர், அவர் சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர்; நம்பிரான் தோழர் என்றனர். அவ்வாறாயின் அடியார்களை வணங்காதவர்க்குத் தலைவன் என்றால் சிவனும் புறகு என்றார். யாருக்கு வரும் இத்துணிவு? அடியார் மீது வைத்த பக்தியால் இறைவனையே மதியாமை, அவரது ஆன்ம வீரம். அவரது இச் சொல்லே நம்பியாரூரரின்

உள்ளத்தில் கணையெனப் பாய்ந்து, அவர் சைவ இயக்கத்தில் ஒரு புதுநெறியாக அடியார் வணக்கத்தை ஏற்றுக் கொள்ளவும், அதற்கு ஒரு புது இலக்கியமாகத் திருத்தொண்டத் தொகையைப் பாடவும் தூண்டுகோலாயிற்று. ஒரு பழிப்புரை உந்து-ஊக்கமாயிற்று (Inspiration) சைவ சமய வரலாற்றில் இது ஒரு திருப்புமுனை. சேரநாடு தந்த கொடை.

மெய்ப்பொருள் வேந்தர் எந்த மதிப்புணர்வால் தொழுது வென்றாரோ, அதே மதிப்புணர்வால் எதிர்த்து வென்றார் விறன்மிண்டர். காப்பியத்தின் முதற்பகுதியில், முன்னும் பின்னும் அடியாரை வணங்கும் தொண்டர்களின் வரலாறு வர, அவற்றுக்கு நடு நாயகமாக இடம்பெறும் விறன்மிண்டரின் வரலாறு, காப்பியவொருமை நோக்கில், மையப்புள்ளி ஆகிறது.

கண்மணி (உருத்திராக்கம்) மாலையும், திருநீற்றுப் பூச்சும் கோவண ஆடையும் சைவத்துறவியர் திருக்கோலம். இவ் ஆடையின் மேல் சுற்றிக்கொள்ளும் ஐந்து முழத்துண்டும் இணைந்து, சிவனடியார் திருக்கோலமாகும். இவை முறையே சிவநேயத்தையும், நிலையாப் பொருள் மேற் பற்றின்மையையும், புலனடக்கத்தையும் காட்டுபவை. இம் மூன்றனுள் புலனடக்கம் துறவிக்கு இன்றியமையாதது. ஆதலின், அதனைக் காட்டும் கோவண ஆடைக்குப் பெருமை மிகுதி.

அடுத்துவரும் அமர் நீதியாரைச் சோதனைக்கு உட்படுத்திய பொருள் ஒரு சைவத்துறவியின் கோவணம் அத்துறவியின் கூற்றாக, ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவாறு உமக்கே ஈங்கு நான் சொல்ல வேண்டுவதில்லை எனச் சேக்கிழார் கூறுகின்றார். கோவணத்தின் பெருமையை புலனடக்கத்தினால் சைவத்துறவியர் பெற்ற சிறப்பை - அறிந்தே, அமர்நீதியார் அடியார்களுக்கு கோவணம் வழங்குதலை வாணாட்பணியாக மேற்கொண்டார். அவர் வணிகர் வணிகத்தில் மட்டுமன்றி, வாழ்க்கையிலும் நீதி வழுவாமையின், அமர்நீதி எனச் சிறப்புப் பெயர் பெற்றார்.

அவரது நீதியுணர்வுக்குச் சோதனை வந்தது. அவர் அன்புடன் மதித்து வணங்கும் சைவத்துறவி ஒருவராலே வந்தது. மழைக்காலத்தில் அவரிடம் வந்த அவ்வந்தணப் பிரம்மசாரி,

தருப்பைப்புல் கயிற்றை இடுப்பில் கட்டி, அதில் கோவணம் சாத்தி, தண்டில் இரண்டு கோவணங்கள் கட்டி, சிகை முடியும், மான் தோலிருக்கையும் தாங்கி, திருநீற்றுக் கீற்றமைந்த நெற்றிப் பொலிவோடு தோன்றினார்.

நாம் காவிரியில் நீராடச் செல்வதாகவும் தம் கோவணங்களுள் ஒன்றைப் பாதுகாப்பாக வைக்குமாறும் அமர்நீதியாரிடம் கூறிச் சென்றார். அமர்நீதியார் பாதுகாப்பாக வைத்த கோவணத்தை அவ் அடியார் மறைத்துவிட்டு, சிறிது நேரத்தில் மழையில் நனைந்தபடியே திரும்பி வந்து, தாம் அளித்த கோவணத்தைத் தருமாறு கேட்டார். அதனைத் தாம் வைத்த இடத்திலும் பிற இடங்களிலும் தேடிக் காணாத அமர்நீதியார், அடியாரிடம் கொடுத்த உறுதியை எவ்வாறு காப்பது? பொய் கூறும் வழக்கமும் இல்லை. நான் கொடுத்த கோவணத்தைத் தாரும் என்றே அடியார் வலியுறுத்தினார் ஆதலின் வேறு புதுக் கோவணம் கொடுப்பினும் கொள்ளார் எனப் பலவாறு எண்ணிச் செயலற்று நின்றார்.

அடியார் ஈரக் கோவணத்துடன் குளிரில் நிற்பதால், அவ்வாறு நிற்கவும் அவர்க்கு நிலை கொள்ளவில்லை. ஒருவாறு துணிந்து, வேறு ஒரு புதுக்கோவணத்தைக் கொண்டு சென்று, அதை ஏற்றுக் கொள்ள வேண்டினார். அடியார் சினங்கொண்டு அவர்மீது களவுப்பழி சுமத்தி, என் கோவணத்தை எடுத்துக் கொள்ளவே அடியார்களுக்குக் கோவணம் வழங்குவதாக அறிவித்தீரா? என்று, அவரது பணிநோக்கத்தையே பழித்தார்.

வேடமே மெய்ப்பொருள் என்ற கொள்கையில் ஊன்றி நின்ற அமர்நீதியார் சினங்கொள்ளவில்லை. மாறாக, அச்சத்தால் மெய்ந்நடுங்கி, புலன்கள் நிலைகுலைய அடியாரை வணங்கி உமது கோவணத்திற்கு ஈடாகப் பட்டாடைகள், இரத்தினங்கள் பலவும் தருவேன்? என்றார். அடியார் கோபந்தணிந்தவர் போல், உம்முடைய பட்டாடைகளால் எனக்காவதென்ன? என்று மறுத்து, தண்டிற் கட்டிய ஈரக்கோவணத்தை அளித்து, இதன் எடையுள்ள கோவணம் தர அமையும் என்றார்.

அவ்வாறே அமர்நீதியார் தராசுத் தட்டில் இட்ட கோவணம் எடையில் குறைந்தது. அடியார்களுக்கு வழங்குதற்கென வைத்திருந்த அத்துணைக் கோவணங்களையும் இட்டார். எடை நிற்கவில்லை. அதிசயம் கொண்ட அமர்நீதியார் தம்மிடம் இருந்த ஆடைகள், பிற பொன் வெள்ளிக் கலங்கள், இரத்தினங்கள் ஆகிய அனைத்துப் பொருட்குவியல்களையும் இட்டார். அவையும் எடையில் ஈடாகவில்லை. அந்த அதிசயத்தை அருள் விளையாட்டு என்கிறார் சேக்கிழார்.

"முட்டில் அன்பர்தம் அன்பிடும் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்ற தட்டு அருளொடும் தாழ்வுறும் வழக்கால்"

அவ்வாறு நிகழ்ந்தது என்கிறார். வணிகர் செல்வத்திற்குக் கொடுக்கும் முதன்மையை இங்குக் கருத வேண்டும். அப்பொருள் முதன்மைக் கருத்தாலும் தடைப்படுத்த இயலாததாய்ப் பெருகுகிறது. அமர்நீதியாரின் அன்பு. தராசில் பொருள்களை இடவில்லை; அன்பை அள்ளியள்ளி இட்டார் அமர் நீதி, அதை ஏற்றுக் கொள்ள ஈசன் அருள் தாழ்ந்து நின்றது என்னும் பொருளும் விளையுமாறு இது அமைந்துள்ளது. இந்த அருள்விளையாட்டு அமர்நீதியின் பேரன்பை வெளிப்படுத்துவதற்காக நிகழ்கிறது. அவர் அந்தப் பேரன்பின் உச்சநிலையை எய்த, அமர்நீதி, தாமும் துணைவியும் மகனும் தராசில் ஏறத்துணிந்து, அதற்கு அடியாரின் இசைவை வேண்டினார். இது, அவர் சிறிதும் தன் முனைப்பின்றி விளங்கியமையைக் காட்டும். அங்ஙனம் செய்ய அடியார் இசைவளித்ததும் அத்தியாக சீலர்கள் ஏறி நின்றனர். தராசுத்தட்டுக்கள் இணையொத்து நின்றன. அன்பரின் சர்வபரித்தியாகம், சோதிக்கவந்த இறைவனின் அருளுக்கு ஈடுகட்டியது. சைவநீதி தலைநிமிர்ந்து நின்றது.

இலக்கணத்தின் தேவை

தமிழாகரர் தெ.முருகசாமி
காரைக்குடி

குறிக்கோளை எடுத்தியம்புவது இலக்கியம். அதுபோலக் குறிக்கோளுக்கு அணவாக இருப்பது இலக்கணம். இலக்கு+அணம்=இலக்கணம். பொதுவாக இலக்கணம் என்பது மொழியின் பாதுகாப்பான சட்டம் போன்றதாயினும் அது அம்மொழியின் சொற்பொருள் கருத்துக்கும் அந்நியப்படாமல் அரணாக நின்று காப்பது என்ற பொருள்படும். அதனை விளக்குவதே இக்கட்டுரையின் கருதுகோள். இதற்கோர் எடுத்துக்காட்டைச் சிலப்பதிகாரத்திலிருந்து காண்போமாக!

பாண்டியனது அரசவையில் கண்ணகி வழக்காட வந்த சூழலில் நடந்த உரையாடலின்போது பரிமாறப்பட்ட சொற்கள் ஈண்டு சிந்திக்கத் தக்கனவாக உள்ளன.

நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீமடக் கொடியோய்

என்பது பாண்டியன் கூற்று

தேரா மன்னா செப்புவ துடையேன்...
நின்பால் கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி என்பது என் பெயரே

என்பது கண்ணகி கூற்று.

பெண்ணணங்கே! கள்வனைக் கோறல் கடுங்கோலன்று

இது பாண்டியன் கூற்று

ஒள்ளிழை, நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே என

இதில் ஒள்ளிழை என்பது கவிக்கூற்று. ஏனையன கண்ணகிக்கூற்று

தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே

இது பாண்டியன் கூற்று.

இவற்றுள் கண்ணகி பற்றிக் கூறும் பெண்ணணங்கே, ஒள்ளிழை, தேமொழி என்ற சொற்கள் பொருள் பொருத்தத்துடன் கூறப்பட்டனவா என நோக்குதல் வேண்டும்.

இதுவரை தன் அரசவையில் எந்தப் பெண்ணும் வந்து வழக்காடாத நிலையில் வழக்காட வந்த முதல்பெண் என்பதால் பாண்டியன் கண்ணகியைப் பெண்ணணங்கே என்றது பொருத்தமாகும்.

உன் கணவன் கள்வன் என்பதால் கொல்லப்பட்டான் எனப் பாண்டியன் கூறியதும் கேட்ட கண்ணகி பதில் கூறத் தொடங்கும்போது அவளை இளங்கோ ஒள்ளிழை எனக் கூறினார். இச்சொல், ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்தவள் எனப்பொருள்படும். அலங்கோலமாக நிற்கும் அவளை அங்ஙனம் உரைக்கலாமா! இஃது கவிக்குற்றமன்றோ? என்றெல்லாம் எண்ணத் தோன்றும்.

அடுத்தும் இவ்வாறே அரசன் கண்ணகியைத் தேன் போன்ற மொழி பேசுபவளே என்ற பொருளில் தேமொழி என்றான். தேரா மன்னா என்றும் நற்றிறம்படரா வேந்தே என்றும் கூறிய கண்ணகி தேமொழி பேசியவளா?

ஆபரணமின்றி அலங்கோலமாய் சுடுசொல் கூறியவள் ஒள்ளிழையும் இல்லை! தேமொழியும் இல்லைதான்!
என்றாலும் கூறியதற்குரிய பொருத்தம் காண்பதில்தான் இலக்கணத்தின் தேவை இலக்கியப் பொருளுக்கு அணவாக நின்று சிறப்பிக்கச் செய்கிறது எனலாம்.

ஒள்ளிழை, தேமொழி என்பன கண்ணகிக்குரிய பெயர்கள் அல்ல. அவை ஈண்டு கண்ணகியைக் குறிப்பன. பொதுவாக அச்சொற்கள் அன்மொழித்தொகை என்ற இலக்கண வகையில் பெண்களைக் குறிப்பன. பெண்களுக்குப் பெயர்களாகவும்

அமைவன. இச்சொற்கள் காரணம் பற்றிக் கூறப்படுவதும் காரணமின்றி இடுகுறியாகக் கூறப்படுவதும் உண்டு. எது எவ்வாறாயினும் கண்ணகியைக் குறித்த இச்சொற்கள் காரணமின்றி அதாவது கருத்தின்றி ஒள்ளிழை எனக் கவிஞராலும் தேமொழி எனப் பாண்டியனாலும் கூறப்பட்டவையாம். அவை அன்மொழித் தொகை இலக்கணமாக ஒரு பெண் என்பதைக் குறித்ததாகக் கொள்ளாமல் சொற்பொருள் பொருத்தம் பார்த்தால் பொருட்குற்றமாகிவிடும். எனவே இலக்கணக் குறிப்புத்தான் இலக்கியப் பொருளைச் சரி செய்ய உதவுகிறது எனலாம்.

மன்னன் கண்ணகியைத் தேமொழி எனக் கருத்தின்றி மொழிந்தாலும் அவனை அங்ஙனம் மொழியச் செய்தது இளங்கோவடிகள் என்பதால் அம்மொழி, காரண இடுகுறியாகக் கூறப்பட்ட இலக்கணப் பொருள் பொருத்தத்தையும் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். இதனை உரையாடல் பகுதியால் உணரலாம்.

நீ யார் எனக் கேட்டவனுக்கு நின்பால் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி எனப்பதில் சொன்னாள் கண்ணகி. உன் கணவன் கள்வன், அதனால் கொல்லப்பட்டான் என்றதும் கண்ணகி விழிப்படைந்ததோடு ஆவேசமுற்று என் கணவன் கள்வன் என்பது எப்படி உறுதி செய்யப்பட்டது? எனக் கேட்பாள் போல என் காற் பொற்சிலம்பு மணியுடை அரியே என்றாள். இக்கூற்று பாண்டியனை யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே எனக் கூற வைத்தது.

சிலம்பின் மேற்புறத்தைக் கண்டு மட்டும் தீர்ப்பு வழங்கிவிடக் கூடாது. அதன் முழு பரிமாணத்தையும் கண்டு முடிவு எடுத்திருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை மணியுடை அரியே என்ற கண்ணகியின் கூற்றுதான் மன்னனுக்குச் சொல்லாமல் சொன்னதால் அவனும் அதை ஒப்புவான் போல அவனது மனைவியின் சிலம்பின் உட்புறப்பரலையே ஈடாக

எடுத்து மொழிகிறான். இவ்வுண்மை, கண்ணகி சிலம்பை உடைத்தபோது வெளிப்பட்டுவிடுவதால், அவள் முன்னர்க் கூறிய மணியுடை அரி என்பதுதான் வழக்கை முடிப்பதற்கான வரைவாக அமைந்துவிட்டது. அதாவது வழக்கென்னும் நோய்க்கு அவளது மணியுடை அரியே என்ற கூற்று மருந்தாக இருந்தது என்பதால் மன்னன் அவளைத் தேமொழி என்றது காரண இடுகுறியாகிவிட்டது.

தேன் ஓர் இனிப்புப் பொருளாயினும் அது மருந்தாகவும் மருந்துடன் குழைத்துத் தரும் பொருளாகவும் உள்ளது என்பதால் ஈண்டு வழக்கென்னும் நோய்க்கு அவளது கூற்று மருந்தாகவும், அவள் கூற்றின் தொடர்ச்சியாக மன்னன் தன் மனைவியின் சிலம்பு முத்துடை அரி எனக் கூட்டி உரைப்பதற்குத் துணையாகவும் இருந்தது. உண்மைகள் எல்லாம் இலக்கணப் பொருத்தத்தால் அமைந்த இலக்கியப் பொருளுக்கான பாதுகாப்பன்றோ!

எனவே இலக்கியச் சுவையை இலக்கணத்தாலும் சுவைக்கலாம் என்பது இக்கட்டுரையின் கருதுகோள்.

பதிப்பாசிரியர்.

பேராசிரியர். இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்
திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. © 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. © 2341116